بـــــــــــــسم الله الر حمن الر حــــــــيم

# மௌலவி ஹிபதுர் ரஹ்மான், மௌலவி நியாஸ் மற்றும் அவரைச் சார்ந்தவர்களுக்கான மூன்றாவது முறையாக முபாஹலா அழைப்பு

**(நபியே!) உமக்கு உண்மையான செய்தி கிடைத்த பின்னரும் இதைப்பற்றி யாரும் உம்மிடம் தர்க்கிக்க வந்தால், (அவர்களுக்கு) நீர் கூறும்: "வாருங்கள்É "நாம் எங்களுடைய மக்களையும், உங்களுடைய மக்களையும், எங்களுடைய மனைவிகளையும், உங்களுடைய மனைவிகளையும், எங்களையும், உங்களையும் அழைத்து (ஒன்றுசேர்த்து) வைத்துக் கொண்டு (ஒவ்வொருவரும் தத்தம் கூற்றே உண்மையெனச்) சத்தியம் செய்து, 'பொய்யர்கள்மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக!' எனப் பிரார்த்திப்போம்". ( ஸூரா ஆலு இம்ரான் : 61 )**

கடந்த 1990ம் ஆண்டில் பாகிஸ்தானுடனான தொடர்பிற்கு முன்னரே இலங்கையில் இஸ்லாம் தோற்றம் பெற்றதை ஒத்துக் கொண்ட ஹிபதுர் ரஹ்மான் மௌலவி தரப்பினர், கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் எம்மிடம் ஷிர்க் வந்ததாகக் கூறி எம்மை முபாஹலாவுக்கு அழைப்பதாக ஒரு பிரசுரம் வெளியிட்டு, அதனை எமக்கு தபால் மூலம் அனுப்பியும் வைத்துள்ளனர். அதில் முன்னுக்குப் பின் முரணான பல முரண்பாடுகளையும் பொய்களையும் கூறியுள்ளனர். அவைகள் வருமாறு:

01. பிரசுரத்தின் ஆரம்பத்தில் அல்குர்ஆனின் 07 : 175, 176ம் வசனத்தைக் குறிப்பிட்டுள்ளனர். அதில் அல்லாஹுத்தஆலா தன்னுடைய வசனங்களை நிராகரிப்பவர்களுக்கு ஒரு உதாரணத்தைக் கூறுகின்றான். இந்த உதாரணத்தை இவர்கள் எமக்குச் சுட்டிக்காட்டுவதன் நோக்கம் என்ன? நாம் எந்த குர்ஆன் வசனத்தை நிராகரித்தோம்? மஸ்ஊத் அஹ்மத் கொண்டு வந்தது சத்தியம் என்று கூறுகின்றார்கள்; நாங்கள் அதனைத்தான் மறுக்கிறோம். ஏதோ குர்ஆன் வசனத்தை நிராகரித்ததைப் போன்று மஸ்ஊத் அஹ்மத் கொண்டு வந்ததை நிராகரித்ததைக் காட்ட முனைகின்றார்கள். யார் மஸ்ஊதி மத்ஹபினர்?

02. மஸ்ஊத் அஹ்மத் கொண்டுவந்தது சத்தியம்தான் என்று ஏற்கனவே மூன்று முறை முபாஹலா செய்து விட்டு தற்போது அவர் கொண்டு வந்தது அசத்தியம் என்று முபாஹலாச் செய்ய அழைப்பதாகக் கூறுகின்றார்கள். மஸ்ஊத் அஹ்மத் கொண்டு வந்தது சத்தியம் என்று நாங்கள் எப்போது

**Formatted:** Font: 14 pt, Complex Script Font: 14 pt
**Formatted:** Centered
**Formatted:** Font: 14 pt, Complex Script Font: 14 pt

முபாஹலாச் செய்துள்ளோம். மஸ்ஊத் அஹ்மதுடன் இணைவதற்கு முன்னரே இங்கு சத்தியம் உருவாகிவிட்டது என்பதனை அவர்களும் ஒத்துக் கொண்டனர். மஸ்ஊத் அஹ்மதுடைய அகீதாவும் எங்களுடைய அகீதாவைப் போன்றுதான் என்று பொய்யைக் கூறி, எங்களை நம்ப வைத்ததன் காரணமாக அவர்களுடன் இணைந்திருந்தோம். இதனால் நாங்கள் வழிதவறவுமில்லை; எங்களுடைய அகீதாவில் இருந்து நாங்கள் ஒரு போதும் மாறியதும் கிடையாது. அந்த அகீதாவின் அடிப்படையில்தான் ஏற்கனவே முபாஹலாக்கள் செய்துள்ளோம். 1993ல; P. J.யுடன் நடந்த விவாதம், மற்றும் யஹ்யா ஸில்மி என்பவருடன் ‘‘பஹ்மு ஸஹாபாவைப் பின்பற்றக் கூடாது’’ என்று சுமார் 10 மணித்தியாலங்களுக்கு மேலாக நடந்த கலந்துரையாடல் போன்றவை இதற்குச் சான்றாகும். எனவே இதுவும் எம்மீது சுமத்தப்பட்ட பொய்யாகும்.

முஹம்மது இஸ்தியாக் என்பவரிடமிருந்து பிரிந்து சென்ற நீங்கள் அதன் பிறகு இரு குழுக்களாகத் தற்போது பிரிந்து மீண்டும் தலைமைத்துவத்தை மாற்றியமைக்கக் காரணம் பாதிஹா சம்பந்தப்பட்ட விடயத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடே! இந்த விடயத்தில் அவர்கள் ஆய்வு செய்வதற்குப் போதிய கால அவகாசம் கொடுக்காது, குரோதத்திலும் விரோதத்திலும் தலைமைத்துவத்தை மாற்றியுள்ள நீங்கள், மஸ்ஊத் அஹ்மத் என்பவர் இவ்வளவு அகீதா முரண்பாடுகளையும், லயீபான ஹதீஸ்களையும் எழுதி இன்று வரை பாகிஸ்தானில் அவைகள் பின்பற்றக் கூடிய நேரத்தில் அவரைப் புனிதராக்க முயற்சி செய்வது, தாங்கள் வழிகெட்ட கூட்டத்தாருடன் இணைந்திருந்ததை மறைப்பதற்கே!

05. மௌலவி ஹிபதுர் ரஹ்மான் ‘‘தான் ஒரு மனிதப் பிறப்பல்ல’’ என்பதை மறைமுகமாகவும் சூசகமாகவும் சொல்லக்கூடிய ஒரு நபர். வாழ்க்கையில் மனிதன் என்பவன் தவறு செய்யக் கூடியவன். ஆனால் 20 வருடகாலம் இவர் குறிப்பிடக் கூடிய மஸ்ஊதி மத்ஹபிலே இருந்த இவர், ‘‘அங்கே காணப்பட்ட எந்த பலயீனமான ஹதீஸ்களையும் தான் பின்பற்றியதே இல்லை’’ என்றும் ‘‘இவற்றிற்காக வேண்டி இதற்குள்ளே இருந்து கொண்டு போராடி வந்ததாகவும்’’ குறிப்பிடுவார். உருது மொழி நன்கு தெரிந்த இவர், ஹதீஸ்கலை அறிஞர்களான முஹத்திஸீன்களையும் மிஞ்சக் கூடியவராக தன்னை நினைத்து மற்றவர்களுக்கு ஹதீஸ்கலையே தெரியாது என்று விமர்சிக்கக் கூடிய இவர், தான் மொழிபெயர்த்து எழுதிய ‘‘முஸ்லிம்களின் அன்றாடப் பிரார்த்தனைகள்’’ புத்தகத்தில் பல பலயீனமான செய்திகளை அச்சிட்டு வெளியிட்டுள்ளார்.

மஸ்ஊத் அஹ்மத் தனது கொள்கையை எழுத்துக்களாக எழுதி வைத்தும், அவைகளை இன்றுவரை பின்பற்றக்கூடிய முஹம்மது இஸ்தியாக் என்பவர் தனக்கு முர்தத் என்று தீர்ப்பு வழங்கும் வரை முஸ்லிமாக

இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். காரணம் என்ன? தவறே செய்யாத தனக்கு 20 வருட காலம் பிழையான வழிகாட்டலில் இருந்ததாக அவப் பெயர் வந்துவிடக் கூடாது என்பதற்கேயாகும். 1969ம் ஆண்டிலிருந்து இன்றுவரை இஜ்மாஉஸ் ஸஹாபாவையும் இஸ்லாத்தின் மூலாதாரமாகப் பின்பற்றக் கூடிய முஹம்மது இஸ்தியாக் என்பவரிடத்தில் ஐந்து வருடங்களுக்கு முன்னர்தான் குப்ர் வந்ததா? அப்படியாயின் கடந்த வருடம் அவர் இலங்கை வந்து உங்களைச் சந்தித்து தான் வழங்கிய முர்தத் பத்வாவை வாபஸ் வாங்கினாரே! அப்படியாயின் இப்பொழுது அவர் முஸ்லிமா? அல்லது அவர் அதே கொள்கையை வைத்துக் கொண்டு உங்களுடன் இணையலாமா?

இதேபோன்றுதான் புதியதொரு கருத்தை இவர் முன்வைக்கும்போது, ‘‘இவ்வளவு காலம் இந்த விடயத்தில் தெளிவில்லாமலா அதனைப் பின்பற்றிக் கொண்டிருந்தீர்கள்?’’ என்ற கேள்வி யைக் கேட்டுவிடுவார்கள் என்பதற்காக வேண்டி, ‘‘இவ்வளவு காலமும் ஆய்வில் இருந்ததாகவும், இப்பொழுதுதான் இந்த ஹதீஸ் கிடைத்துள்ளதாகவும்’’ கூறிவிடுவார். அண்மையில் சப்தமிட்டு ஓதும் தொழுகைகளில் ம.்.மூம்கள் சூரா பாதிஹாவை எப்போது ஓதுவது சம்பந்தமாக ஆய்வு செய்துவிட்டும், அது சம்பந்தப்பட்ட ஹதீஸ் தற்போதுதான் தனக்குக் கிடைத்ததாகக் கூறியுள்ளார். சூரா பாதிஹா சம்பந்தமாக இவருடைய இமாமாகிய மஸ்ஊத் அஹ்மத் தன்னுடைய ‘‘ஸலாத்துல் முஸ்லிமீன்’’ என்ற நூலில் 335ம் பக்கத்தில் இந்த ஹதீஸையே ஆதாரமாகக் கொண்டு வந்திருந்தார். தன்னுடைய இமாமுடைய தீர்ப்பின்படி அமல் செய்து கொண்டே பல வருடமாக இது சம்பந்தப்பட்ட ஆய்வில் இருந்ததாகக் கூறும் இவர், தனது இமாமின் ஆய்வைப் பார்க்காமலா அமல் செய்து கொண்டிருந்தார்?

06. ‘‘மௌலவி உமர் அலி கடந்த 5 வருடங்களாக பாகிஸ்தானில் உள்ளவரை தக்லீத் செய்து கொண்டிருந்தார்’’ என்றும் ஒரு பொய்யைக் குறிப்பிட்டுள்ளனர்.. மௌலவி உமர் அலி அவர்கள் பாகிஸ்தானில் உள்ளவரை திருத்தலாம் என்று பல முயற்சிகள் செய்தும் இறுதியில் ‘‘குர்ஆன், ஸுன்னாவுடன் இன்னும் பல மூலாதாரங்களைப் பின்பற்றத்தான் வேண்டும்’’ என்று உறுதியாகக் கூறியதோடு, அதனைச் செய்யும்படி கட்டளையும் இட்டார். இவ்வாறு தெளிவாக நிராகரித்ததன் பின்னர்தான் அவரைவிட்டும் ஒதுங்கினார். தலைமைத்துவ ஆசை இருந்திருந்தால் இந்த முடிவை 7 வருடங்களுக்கு முன்னரே எடுத்திருப்பார். ஆனால் மௌலவி ஹிபதுர் ரஹ்மான் என்பவர் தனக்கு அமீர் பதவியை விட்டுத்தருமாறு நௌஸாத் மாஸ்டரிடம் கேட்டு, அது கிடைக்காத காரணத்தினால் சந்தர்ப்பம் பார்த்திருந்து பாதிஹா விடயத்தை காரணம் காட்டி, பலி தீர்த்துக்கொண்டு அதிலிருந்து பாய்ந்து சென்றதாக அவர்கள் கூறுகின்றனர்.. பதவி ஆசை என்று கூறிவிடுவார்கள் என்பதற்காக பொம்மையாக இன்னுமொருவரை வைத்து தான் உலமாக்களுக்கான தலைவர் என்று பிரகடனப்படுத்திக் கொண்டார். கேவலம் அவர்கள் இவரை ‘‘உலக விடயத்திலும் மோசடி செய்பவர்’’, ‘‘மார்க்க விடயத்திலும் மோசடி செய்பவர்’’,

‘‘பொய்யன்’’, ‘‘கெட்டவன்’’ என்றெல்லாம் கூறி, பொய் விடயத்தில் முபாஹலா செய்வதற்கும் ஒருவர் அழைத்துள்ளார். அதுமாத்திரமன்றி ‘‘இவர் ஒரு தெளிவான ஹவாரிஜ்’’ என்றும் பத்வா கொடுத்துள்ளனர். அல்லாஹ் யாரை இழிவு படுத்தியுள்ளான் என்பதை கவனிக்கவில்லையா? குறைந்தபட்சம் உலக விடயத்தில் நல்ல பெயர் வாங்குபவன் மார்க்க விடயத்திலும் நன்றாக இருப்பான்.

07. உமர் அலி மௌலவியும் அவர்களைச் சார்ந்தவர்களும் வழிகேடு என்பதற்குச் சான்றாக ‘‘பாமரர்களை வைத்து சூராக் குழு அமைத்திருக்கின்றார்கள்’’ என்று குற்றஞ்சாட்டுகின்றார். அடுத்தவர்களைத் தாழ்த்துவதும் தன்னுடைய ஆய்வுதான் இறுதியானதும், உறுதியானதும் என்ற அகம்பாவம் கொண்டவர். இவர் தனது தவறை ஒத்துக் கொண்ட சந்தர்ப்பங்களே கிடையாது. அல்லாஹ்வின் உதவியால் பாகிஸ்தானில் உள்ள பிரிவை விட்டு நாங்கள் ஒதுங்கியதன் பின்னர் முதன்முதலாகச் செய்த வேலை, ‘‘மஜ்லிஸுஸ் ஸுரா’’ எனும் குழுவை நியமித்து, எங்களுக்கு மத்தியில் உள்ள கருத்து முரண்பாடான விடயங்களை, அல்குர்ஆனின் 04:59வது வசனப்படி, அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் கொண்டு செல்வதற்காக வேண்டி, குர்ஆன் ஸுன்னாவிலிருந்து மாத்திரம் ஆய்வு செய்து வருகின்றோம். மாதாமாதம் தொடர்ந்து நடைபெற்று வரும் சூராவில் இது வரைக்கும் 20ற்கும் மேற்பட்ட விடயங்களில் தீர்மானம் எடுத்து, பலயீனமான விடயங்களை விட்டும் மக்களைத் தவிர்ந்து நடக்குமாறு பகிரங்கமாக பிரசுரம் மூலம் வெளியிட்டு எமது தவறை ஒத்துக்கொண்டு திருத்திக் கொண்டிருக்கிறோம். அல்லாஹ் செய்த மாபெரும் கிருபை; இவரைப்போன்ற கர்வம் கொண்ட உலமாக்களல்லாது, பொறுமையாக இருந்து ஒரு விடயத்தை பல நாட்கள் ஆய்வு செய்யக்கூடிய அவரைவிட நன்கு தேர்ச்சி பெற்ற உலமாக்கள் மூலம் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. ஆனால் இவரோ தானேத் தலைவராகச் செயற்படக் கூடியவர்.

ஜமாஅதுல் முஸ்லிமீன், மஸ்ஜிதுல் முஸ்லிமீன், கல்பிட்டி வீதி, ஏத்தாளை.

www. jamaathulmuslimeen.com , mail : jamaathulmuslimeen@gmail.com

Phone : 032 22 68818

20. 10. 2016

**Formatted:** Font: (Default) +Headings CS (Times New Roman), 12 pt, Bold, Complex Script Font: +Headings CS (Times New Roman), 12 pt, Bold

**Formatted:** Font: 12 pt, Bold, Complex Script Font: 12 pt, Bold

**Formatted:** Font: (Default) +Headings CS (Times New Roman), 12 pt, Bold, Complex Script Font: +Headings CS (Times New Roman), 12 pt, Bold

**Field Code Changed**

**Formatted:** Hyperlink, Font: (Default) +Headings CS (Times New Roman), 12 pt, Bold, Complex Script Font: +Headings CS (Times New Roman), 12 pt, Bold